இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 30 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 23 – புதன்கிழமை 09 செப்டம்பர் 2026 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 30 : Thiruvalluvar Year - 2057 - Aavani 23 - Wednesday 09 September 2026 - Dak 10 Pages ₹ 5.00

## பேரவை மாண்போடுதான் நடக்கிறதா?

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

சென்னை, செப். 9 -

சட்டப்பேரவையில் காவல் துறை, மீட்புப் பணிகள் துறை உள்ளிட்ட துறைகளின் மானியக் கோரிக்கை மீதான விவாதங்க ளுக்கு முதல்வர் விஜய் நேற்று முன்தினம் பதிலுரை அளித்தார்.

அப்போது அவர் தி.மு.க. மீது அவதூறாகவும் உண்மைக்குப் புறம்பாகவும் பல்வேறு குற்றச் சாட்டுகளை முன்வைத்தார்.



பேரவையில் இல்லாதவர்களைப் பற்றியும், நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கும் வழக்குகள் பற்றியும் முதல்வர் விஜய் பேசியதை நீக்கக் கோரி சட்டப்பேரவையில் நேற்று கழகம் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால், முதல்வர் விஜய் பேசிய கருத்துகளை நீக்க பேரவைத் தலைவர் மறுத்துவிட்டார்.

கழகத்தின் கோரிக்கையை வலியுறுத்தி பேரவையில் தர்ணா செய்த கழக உறுப்பினர்கள் சட்டப்பேரவையில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

இந்த நிலையில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று மதியம் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம், சட்டப்பேரவை நிகழ்வு பற்றி செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த கழகத் தலைவர் அவர்கள், “தமிழ்நாடு சட்டப்பேரவை மாண்போடு நடக்கிறதா? என நீங்கள் எல்லாம் கேள்வி கேட்கும் அளவுக்குத் தான் சட்டப்பேரவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது” எனத் தெரிவித்தார்.

### திருச்சி கிழக்கு – கரூர் உள்ளிட்ட

## 5 தொகுதிகளில் இடைத்தேர்தல் அறிவிக்க தடை நீட்டிப்பு!

### சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, செப். 9 -

திருச்சி கிழக்கு, கரூர் உள்ளிட்ட 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க விதிக்கப்பட்ட தடையை நீட்டித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கரூர், விராலிமலை, பெருந்துறை, அம்பாசமுத்திரம், ஆகிய தொகுதிகளில் வெற்றி பெற்ற அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் பதவி விலகினர். பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்ற முதலமைச்சர் விஜய், திருச்சி கிழக்கு தொகுதியை ராஜினாமா செய்துவிட்டார். இதனால் இந்த தொகுதிகள் காலியானதாக அறிவிக்கப்பட்டது.

இதனிடையே, இந்த 5 தொகுதிகளில் “தேர்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், இத்தொகுதிகளுக்கு இடைத் தேர்தல் அறிவிக்கத் தடை விதிக்க வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டது.



இதனை விசாரித்த உயர்நீதிமன்றம், திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை, பெருந்துறை, அம்பாசமுத்திரம் ஆகிய தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டது.

இந்தத் தடையை நீக்கக் கோரி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களான சி.விஜயபாஸ்கர் மற்றும் எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகியோர் நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி முன் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, பெருந்துறை முன்னாள் எம்.எல்.ஏ. ஜெயக்குமார் தரப்பில் தடையை நீக்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது. அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், இந்த 5 தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் அறிவிப்பு வெளியிடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடையை செப்டம்பர் 28ம் தேதி வரை நீட்டித்து உத்தரவிட்டனர்.

### ‘மறைந்தவர்களைப் பற்றி பேசலாமா?’ – கே.என்.நேரு! ‘அவை மாண்புகளை மீறி விட்டார் முதல்வர்!’ – எ.வ.வேலு!

## திட்டமிட்டு ஆதாரமற்ற

# முதல்வரின் அவதூறுப் பேச்சை நீக்க வேண்டும்!

### பேரவையில் தி.மு.க. கோரிக்கை! பேரவைத் தலைவர் அனுமதி மறுப்பு!

### கழக உறுப்பினர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றம்!

சென்னை, செப். 9 -

**முதல்வர் விஜய், ஆதாரம் இல்லாமல் பேசிய அவதூறுப் பேச்சுக்களை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என வலியுறுத்திய தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் சட்டப்பேரவையில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.**

நேற்று காலை சட்டப்பேரவை தொடங்கியதும், முதலமைச்சர் அளித்த பதிலுரை பேச்சு, சட்டமன்ற மரபுகளுக்கு எதிரானது என்றும், அந்தப் பேச்சுக்களை அவைக்குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் எனவும் தி.மு.க. கொறடா எ.வ.வேலு வலியுறுத்தினார்.

மிசா காலத்தில் ஜனநாயகத்தைக் காப்பாற்ற தி.மு.க. தலைவர் ஓராண்டு சிறையில் இருந்ததாகவும், அவையில் இல்லாதவர்கள் குறித்து பேசக்கூடாது என்ற விதியை மீறி முதலமைச்சர் பேசியிருப்பதாகவும் அவர் கூறினார்.

எந்தக் குற்றச்சாட்டும் நிரூபிக்கப்படவில்லை என சர்க்காரியா கமிஷனின் இறுதி அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் எ.வ.வேலு தெரிவித்தார்.

இதே கருத்துக்களை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கே.என்.நேரு, கோவி. செழியன் ஆகியோரும் வலியுறுத்தினர்.

ஆதாரம் இன்றிப் பேசிய முதலமைச்சரின் பேச்சை அவைக்குறிப்பிலிருந்து





நீக்க சபாநாயகர் மறுத்துவிட்டார். இதனைக் கண்டித்து ஒருதலைபட்சமாக செயல்படும் சபாநாயகரின் இருக்கையை முற்றுகையிட்டு தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள், “நீதி வேண்டும் நீதி வேண்டும்” என முழக்கங்களை எழுப்பினர். பின்னர், சபாநாயகரின் இருக்கை அருகே அமர்ந்து தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

#### தி.மு.க. தோழமைக் கட்சிகள் வெளிநடப்பு!

இதனைத் தொடர்ந்து தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அனைவரையும் வெளியேற்றுமாறு சபாநாயகர் உத்தரவிட்டடார். இதன்படி, அவைக் காவலர்கள் தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றினர். இதனால், சட்டப் பேரவையில் அசாதாரணமான சூழல் நிலவியது.

சட்டப் பேரவையில் கழக உறுப்பினர்கள் குண்டுக் கட்டாக வெளியேற்றப்பட்டதைக் கண்டித்து - தி.மு.க. தோழமைக் கட்சி உறுப்பினர்களான தே.மு.தி.க., பிரேமலதா விஜய்காந்த், மனித நேய மக்கள் கட்சி பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா, மனித நேய ஜனநாயகக் கட்சி தமீமுன் அன்சாரி, கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சி நித்யானந்தன் ஆகியோர் பேரவையில் இருந்து வெளிநடப்புச் செய்தது குறிப்பிடத்தக்கது.

#### எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு பேச்சு!

**“மறைந்தவர்களைப் பற்றி அவையில் முதலமைச்சர் பேசலாமா?” என்று சட்டப் பேரவையில் நேற்று எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு அவர்கள் கேள்வி எழுப்பினார்.**

சட்டப் பேரவையில் இதுகுறித்து சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் கே.என்.நேரு பேசியதாவது:-

நேற்று காவல்துறை விவாதத்திலே முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்கையிலே, சர்க்காரியா கமிஷனைப் பற்றியும், ஈ.டி.யில் (ED) இருக்கிற விசாரணையைப் பற்றியும், மிசாவில் இருந்து யார் யாரெல்லாம் சென்றதைப் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

மிசாவில் திருமணம் முடிந்து ஓரிரு நாட்களிலே சிறைக்கு சென்றவர் எங்களுடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள். அதேபோல நம்முடைய சர்க்காரியா கமிஷனில், யாரு சர்க்காரியா கமிஷனுக்காக புகார் கொடுத்தார்களோ, அவர்களே “எனக்கு ஒன்றும் தெரியாது” என்று சொல்லி அதை நீக்கிவிட்டது, ஈ.டி.யில் நீதிமன்றத்தில் விசாரணையில் இருப்பதைப் பற்றியெல்லாம் பேரவையில் முதலமைச்சர் பேசுகிறார்.

பேரவையில் இதுகுறித்து எங்களுடைய கொறடா பேசினார், “ஏற்கனவே அவைக்குறிப்பிலிருந்து அனைத்தையும் நீக்க வேண்டும்” என்று அவருடைய கோரிக்கையை வைத்திருக்கிறார்.

பேரவைத் தலைவர் அவர்கள், நேற்று எங்களுக்கு கேட்கின்ற போது பேசுவதற்கு இந்த அனுமதியை தந்திருப்பீர்களானால், நேற்றே முதலமைச்சர் இருக்கும்போது எல்லா விளக்கங்களும் எங்களுக்கு கிடைத்திருக்கும். எனவே, மறைந்தவர்களைப் பற்றி, இந்த அவையிலே இல்லாதவர்களைப் பற்றியெல்லாம், அது நம்முடைய அமைச்சரோ அல்லது ஒரு உறுப்பினர்களோ பேசலாம். ஆனால், முதலமைச்சர் பேசுவது என்ன நியாயம்?

இவ்வாறு கே.என்.நேரு பேசினார்.

#### எதிர்க்கட்சி கொறடா எ.வ.வேலு பேச்சு!

**சட்டப் பேரவை நேற்று காலை கூடியதும் சட்டமன்ற கழக கொறடா எ.வ.வேலு அவர்கள் எழுந்து பேரவையில் நேற்று முன்தினம் முதலமைச்சர் விஜய் ஆற்றிய பதிலுரை குறித்து ஒரு பிரச்சினையை எழுப்பி பேசினார்.**

பேரவையில் எ.வ.வேலு அவர்கள் குறிப்பிட்டதாவது:-

முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள், நம்முடைய எடப்பாடி பழனிசாமி அவர்கள், அதேபோன்று ஓ.பன்னீர் செல்வம் போன்றவர்கள் எல்லாம் இந்த மாமன்றத்திலே முதலமைச்சராக இருந்து

தொடர்ச்சி 3ஆம் பக்கம்